# உதயதாரகை.—MORNING STAR.

*Published on the 1st and 3d Thursday of every Month at one shilling a Quarter, payable in advance.*

உ. புத்தகம், சஞ்சிகை. ரு.] ௲அ௱௪௰உ ௵. பங்குனி ௩, தேயதி வியாழக்கிழமை, Thursday, March 3, 1842. [Vol. II. No. 5.


## வரலாறு.

உதயதாரகைப் பத்திரத்தில் கற்கை, சாஸ்திரம், பொதுவான கல்வி, பயிர்ச்செய்கை, அரசாட்சி, மார்க்கம் முதலானவையைப் பற்றியும், பிரதான புதினச் சங்கதிகளைப்பற்றியும் அச்சடிக்கப்படும்.

இதின்விலை, மூன்று மாதத்திற்கும் முன்னறக் கொடுத்திருந்தால் அப்பத்திரங்களின் விலை ஒரு சிலிங்கு.

இதிற் பத்துப் பத்திரிகைக்குக் கையெழுத்து வைத்து மாதாந்தம் பணம் முன்னேறக் கொடுத்து வைத்து, மறு பெயருக்குச் செலவிடக்கூடிய காரியகாரருக்கு இதின் விலை பத்திரம் ஒன்றுக்கு மூன்றுமாதத்திற்கு முன்னறக்கொடுத்திருந்தால் விலை, ௯.பென்சு.

இருபதுக்குக் கையெழுத்து வைத்து வருஷாந்தம் முன்னேறக் கொடுத்துவைக்குங் காரியக்காரருக்கு இதன் விலை பத்திரம் ஒன்றுக்கு மூன்றுமாதத்திற்கு முன்னறக் கொடுத்திருந்தால், விலை ஆறு பென்சு.

☞ தவாற்செலவை விட.

காகிதம் எழுதிக்கொள்பவர்கள் தாங்கள் அறிவிக்க வேண்டியவைகளை உதயதாரகைப் பத்திரத்தினது முகாமைக்காரருக்கு எழுதித் தவாற்செலவு கொடுத்தனுப்பவும்.

## TERMS.

The MORNING STAR will be devoted to Education, Science, and general Literature, and to the dissemination of articles on Agriculture, Government, and Religion, with a brief summary of important News.

The PRICE of the Paper is *one shilling* a quarter, payable in advance.

To Agents who subscribe for *ten copies* and pay *in advance*, the price is *nine pence* a quarter.

To those who subscribe for *twenty copies* and pay *in advance*, the price is *six pence* a quarter.

N. B. Postage extra.

CORRESPONDENTS may send their Communications *post paid* addressed to "The Editors of the Morning Star," Batticotta, Jaffna.

ADVERTISEMENTS will be inserted in the "Morning Star" at the rate of *one penny and a half* a line for the first insertion, and *one penny* a line for the second and subsequent insertions,—reckoning the type at Long Primer size, or 7½ Lines to an inch.

The following persons are authorized to act as *Agents* for the "Morning Star."

JAFFNAPATAM—Mr. C. F. Grenier; MANEPY—C. A. Goodrich; BATTICOTTA SEMINARY—W. Volk; CHUNDICOLY—M. J. Povirrayasingem; WANNARPONY—S. Tampiahpilly; PT. PEDRO—A. Stansbury; MOOLLITEVOE—A. Mc Farland; BATTICALOE—S. A. Allegecoon Modliar; MANNAR—M. S. Povirrayasingem Modlier; CALPENTYN—J. Woodhull; TRINCOMALIE—Rev. C. Hole; COLOMBO—Philip Canjimanadan; KANDY—Rev. W. Oakley; MADURA—Rev. F. D. Ward; DINDIGUL—Rev. J. J. Lawrence; TANJORE—Rev. T. Brotherton; MADRAS—P. R. Hunt, Esq.

## பாண்டி வள நாட்டுச் சரித்திரக் குறிப்பு.

(Historical Sketch of the Pandian Kingdom.)

(Continued from page 38.)

இராசேந்திரனுடைய குமாரனாகிய சவுந்திரியபாதகேசரன் என்றவன் தன் தகப்பனுக்குப் பின் பட்டத்துக்கு வந்தான். அவன் தன் முன்னோர்களைப் போலவே தானுஞ் சோழ ராசாவோடே யுத்த கலகத்தில் ஏற்பட்டிருந்தான். இந்த ஓயாத சச்சரவுகள் வெகு காலமாக இராசாக்களுக்குள்ளே உண்டாயிருந்தது. இதிலே அந்தப் பாண்டிய ராசா தன்னுடைய கலகக்காரர்களுக்கு முன்பாக வலிய ஓடிப்போனதாகவும், அவர்கள் ராசா அந்த ஓடிப்போன சத்துருக்களைத் துரத்திக்கொண்டு போனதாகவும், இப்படியிருக்கையிற் பகையாளிகள் சயிக்காமல் மதுரை காப்பாற்றப்பட்டதென்றும், ஆனதுகொண்டு இச்சம்பவந் தற்செயலாய்த்தான் வந்ததல்ல அந்த மதுரையிலிருக்கிற ரட்சை தேவதைகள் கலகத்தினால் வந்ததென்று காண்கிறது. சவுந்தரியபாதன் தன் ராசதானிக்குத் திரும்பிவந்தபிறகு, கொஞ்சக் காலத்தில் இறந்துபோனான். எப்படியென்றால், எல்லாப் பாண்டிய ராசாக்களைக் குறித்துச் சொல்லுகிறபடியே இவனும் அந்தக் கோவிலிலே மூலலிங்கமிருக்கிற கெற்பகிரகத்திலே போய் அந்தத் தேவனோடே ஐக்கியமாய்விட்டானென்று காண்கின்றது. இதை அந்தக் குருக்கள்மார், ஆராலேயாவது சாகிறதுபோனார்களோ ஆ தங்களுக்கு இஷ்டமில்லாத அந்த ராசாக்களினின்றுந் தப்பித்துக்கொள்ளுகிறதற்காகப்பண்ணின தந்திரமென்று நாம் பாணிக்கவேண்டியது. இல்லாவிட்டால், அந்தச் சடங்கானது அந்த இராச்சியத்திலே வழங்குகிற மதாச்சாரப் பிரிவாயிருந்ததென்றும் மேலை இந்துஸ்தானத்திலே சாகப்போகிறவனைக் கங்கைக் கரையிலே கொண்டுவந்து அவ்விடத்திலே அவனுடைய அந்திய சுவாசத்தை விடும்படியாய்ப் பண்ணுகிற வழக்கம்போலே இவ்விடத்திலுங் கூட ராசாக்களையும் பிரபுக்களையுங் கோவிலுக்குக் கொண்டுவந்து அந்தரட்சை தேவதைகளின் சந்நிதானத்திலே சாகப்பண்ணினார்களென்றாவது நாம் வைத்துக்கொள்ளவேண்டும்.

மேற் சொன்ன ராசாவின் மகனாகிய வரகுணபாண்டியன் அவனுக்குப் பின் பட்டத்துக்கு வந்தான். அவன் ராசாங்கத்திலேயும் அந்த வழக்கமான அற்புதங்கள் நடந்தன. ஆயினும் இதுவரைக்கும் அனுசரித்துவந்த சாதனங்களிலே ஒன்றுஞ் சரித்திரமாயிருக்கவில்லை. மேற்சொல்லியபடி, இந்த வரகுணபாண்டியனுக்குச் சோழ ராசா தன் குமாரத்தியைக் கலியாணம்பண்ணிக்கொடுத்து அந்த இராச்சியத்தையும் அவனுக்குக் கொடுத்துவிட்டபடியினாலே அந்தச் சோழ ராசாக்களின் வமிச வழி அற்றுப்போயிற்றென்று அந்தச் சோழ இராசாக்களுடைய சாதனங்கள் சொல்லுகிறபடியினாலே இதைப் பற்றிச் சொல்வது அவசரமல்ல, இந்த இரண்டு இராச்சியங்கள் ஒரு இராச்சியங்களுக்குள்ளே ஐக்கியமாய்ப்போனது. இந்த இராசா துரைத்தனமபண்ணிக்கொண்டிருந்த காலத்திலே நிசமாய் நடந்திருக்கிறதாகக் காண்கின்றது. ஆகிலும் அந்தக் காரியம் பின்னையொரு சாதனத்தாலே ஆதரிக்கப்படுகின்றது. அதாவது, வரகுணபாண்டியனுடைய சரித்திரமானது கராவர சோழ ராசாவென்கிறவனாலே உண்டான கலகத்திலே அவனோடிப்போனதும், பிறகு அவன் அந்த இராச்சியத்தைச் சயித்துக்கொண்டதும், அதைப் பாண்டிய தேசத்தோடே சேர்த்துக்கொண்டதுஞ் சொல்லுகின்றது. பாணன் அல்லது பாணபத்திரனென்றவன் இந்த இராசாவின் ராசீகத்திலே ஒரு வித்துவானென்றதாய்ப் பேர்போந்தவனாயிருந்தான்.

வரராசா அல்லது ராசராசேந்திரன் என்கிற பாண்டியன் இந்த வரகுணபாண்டிய இராசனுக்குப் பின்னாலே பட்டத்துக்கு வந்தான். அவனுடைய இராசாங்கத்திலே ஒரு சிரிப்புக்கிடமான சரித்திரஞ் சொல்லப்படுகின்றது. அது மிகவும் புனருத்தியாயிருக்கிறபடியினாலே அதினுடைய போகடிகள் மதுரையிலே இக்காலத்திலுங் காணப்படுகிற கற்சித்திரங்களிலே காணலாம்.

மதுரைக்கு மேற்கே குருவைத்தூரி என்கிற ஊரிலே ஒரு சங்கைபோந்த குடித்தனக்காரனுக்குப் பன்னிரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் தங்கள் காலத்தைப் பற்பலவித வேடிக்கைகளிலும் முக்கியமாய் வேட்டையாடுதலிலும் போக்கிக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் ஒரு காட்டுப் பன்றியையும், அதின் குட்டிகளையும் வளைத்துக்கொண்டு சிலவற்றைக் கொன்றுபோட்டார்கள். மற்றவைகள் யோகமனுட்டித்துக்கொண்டிருந்த ஒரு மகாதபோதனரிஷியிடத்துக்கோடிப்போய்விட்டது. அவைகளையும் அவ்விராச குமாரர்கள் தொடர்ந்து போய் அந்த ரிஷியின் யோகத்தைக் கலைத்தபடியினாலே, நீங்கள் மறுபிறப்பிற் பன்றிகளாய்ப் பிறப்பீர்களென்று அவர்களை அவர் சபித்தார். அப்படியிருக்க அவர்கள் கெறுவபங்கமாகி அதை மன்னிக்கும்படியாய் அவரை மிகவுந் தெண்டனிட்டதின்பேரில நீங்கள் அப்படிச் சில

காலங் குறைந்திருப்பதே பின்னால் உங்களுக்கு மேன்மையுங் கீர்த்தியும் வருமென்று தம்முடைய சாபத்தை அவ்வளவு மட்டும் அவர் சாந்திபண்ணினார்.

அந்தப் பன்னிரண்டு வாலிபர்களும் அந்தப்படிக்குப் பன்றிகளாய்ப் பிறந்தபடியினாலே தங்கள் சொந்தச் சீவனத்துக்குச் சம்பாதிக்கமாட்டாத அவ்வளவு இளங் குட்டிகளாயிருக்க, அவைகளைப் பெற்ற பன்றிகளை இராசராசேந்திரனும் அவனோடே கூடப்போன வேட்டைக்காரர்களும் ஈட்டிகளாற் கொன்றுபோட்டார்கள். அவர்கள் வேட்டையாடின சமயத்தில் சொக்கநாயகரும், மீனாட்சி அம்மனும் அந்தக் காட்டிலேயிருக்கும்படியாய்நேரிட்டதினாலே அந்தப் பரதாபமான ஸ்திதிகளுக்கு அவர்கள் மனதிரங்கி அவைகளைப் பெற்ற பன்றிகள் எப்படிச் செய்யுமோ அப்படிச் செய்ய எத்தனித்தார்கள். அதினாலே மீனாட்சி அம்மன் அவைகளுக்குப் பால்கொடுக்கிற வேலையைச் செய்தாள். சொக்கநாயகரும அவைகளுக்குவாத்தியாயரானார். இந்தத் தெய்வச் சகாயத்தினாலே அவர்களுக்குண்டான பலன் என்னவென்றால் அவைகளுடைய சரீரங்கள் மனித சரீரங்களாய்விட்டன. ஆகையினாலே அவைகள் பன்றித் தலைகளோடேயிருக்கிற மனிதர்களாய்விட்டார்கள். இன்னும் அவர்கள் சொக்கநாயகரிடத்திலே கற்றுக்கொண்டு சாஸ்திரங்களிலுங் கலைக்கியானங்களிலு மிகவுந் தேற்றங்கொண்டவர்களானதினாற் பாண்டிய தேசத்துக் காரியங்களை விசாரிக்கிற மந்திரிகளானார்கள். (இன்னும் வரும்.)

---

## Life of Mohammed.—மகமதுவின் சரித்திரம்.

### ௫. அதிகாரம்.

*The Prophet announces his Mission among his kindred of the Koreish—Meets with a harsh repulse—Begins to declare it in public—View of his fundamental Doctrines.*

(மகமது தான்பெற்றுக்கொண்ட தேவ உத்தியோகத்தானுபத்தியத்தைக் கூறின வரலாறு.)

மகமது என்பவர் தான் அனுப்பப்பட்ட நோக்கத்தை இவ்வேளைவரைக்கும் அந்தரங்கத்திலே காரியப்படுத்திவந்தாலும் அவருக்கு அதிகங் கிட்டின சுற்றத்தாருஞ் சிநேகிதர்களுமே மகமது சமயானுசாரிகளாய் வரத் தலைப்பட்டதினால் அவருந் "தன்னுடைய இனத்தவர்களாகிய கோறிஸவம்மிசந் தொடக்கமாகப் பிரசங்கம்பண்ணலாமென்று ஆண்டவன் தனக்கு உத்தரவளித்தார்" என்று சொன்னார். எப்படியெனில் "ஆ! மறைக்கப்பட்டிருந்தவனே, எழும்பி உன் ஆண்டவனைப்பற்றிப் பிரசங்கம்பண்ணி அவரைப் புகழ்ந்தேற்றி உனக்கு அதிகங்கிட்டின உறவோருக்குப் புத்திகற்பியும" இப்படித் தேவ அனுக்கிரகங் கிடைத்ததினால் (Ali) ஆலியென்பவரிடத்தில் ஒரு விருந்து உண்டுபண்ணச் சொல்லி அதற்கு விருந்தினராக (Abdool Matalleb) அப்தால் மோத்தாலேப்பென்பவருடைய பின் சந்ததியாரை வரவழைத்துச் சகலரும் வந்து கூடியிருந்தபொழுது மகமது ஒழுக்கவணக்கமாய் எழும்பி நின்று தான் அப்போஸ்தலனாக அழைக்கப்பட்ட வரலாற்றைச் சொன்ன சமயத்தில் (Abu Laheb) அபூலேகாப்பென்பவன் எப்படியோ ஒரு குழப்பத்தை உண்டுபண்ணினதினால், வந்திருந்த விருந்தினரெல்லாருங் கலைந்து அவரவரேபோக மகமது நபியுந் தானெடுத்த முயற்சியை நிறைவேற்றிக்கொள்ளக் கூடாமற் போய்விட்டார். அப்படியிருந்தும் அடுத்தநாளும் ஒரு விருந்தை உண்டுபண்ணி அதில ஏறக்குறைய (௪௰) சனமட்டுக்கு வந்துகூடியிருக்குந் தருணத்தில், மகமது நபி எழும்பிநின்று அந்த விருந்தாளிகளுக்குச் சொன்னதென்னவெனில் "நான் இச்சமயத்தில் உங்களுக்கறிவிக்கிறதிலும் அதிகமான நற்காரியங்களைத் தன் சுற்றத்தாருக்குச் சொலலத்தக்க வேறொருவன் இந்த அரபியில் எவ்விடத்திலாகுதல் சஞ்சரிக்கிறானோவென்பதை நான் அறியமாட்டேன், இகத்துக்கும் பரத்துக்கும்வேண்டியபாக்கியத்தை நானே உங்களுக்கு அளிக்கிறேன். சருவவல்லமையுள்ள பராபரன் உங்களைத் தம்மிடம் அழைக்கும்படி எனக்குக் கற்பித்திருக்கிறார். ஆனபடியினாலே அவரோ உங்கள் நடுவே எனக்குச் சகாயனும், எனக்குச் சகோதரனும், எனக்குத் துணையாளியுமாயிருப்பார்.

இப்படி அவர் பேசினபொழுது சனத்துக்குள் ஒரு பிரமிப்புண்டானதினால் எல்லாரும் மௌனமாயிருந்து ஒருவரேனும் அவர்சொன்ன காரியத்தை அங்கீகாரம பண்ணாமலிருந்தபொழுது ஆலியென்பவர் மெத்த வேகங்கொண்டு வெடித்து நானதானே மகமது நபிக்குத் துணைவனுஞ் சகோதரனுமென்று அனைவருமறியச் சொன்னான். எப்படியெனில், ஆ! பராபரனுடைய தீர்க்கதரிசியே நானே உமக்கு உதவிக்காரனாயிருப்பேன் உம்மைவிரோதித்துத் தள்ளத் துணிகரமுள்ளவர்களுடைய பற்களை நான் அடித்துக்கொட்டி அவர்களுடைய கண்களைப் பிடுங்கி உதரத்தை அரிந்து பிளந்து கால்களை வெட்டித்தறிப்பேன். இப்படி அவன் சொன்னவுடனே மகமது நபியும் இவனைத் தன் கரத்தில் அணைத்துச் சொன்னது "இவரோ என் சகோதரனும், என் உதவிக்காரனும், எனக்குப்பின் என் பட்டத்துக்கு வருகிறவருமாயிருக்கிறார்" இதைக் கேட்டவுடனே சனமெல்லாம் பக்கெனக் குலுங்க நகைத்து "ஓய் அபூதாலாவே (Abu Taleb) நீர்தானே உமது புத்திரனுக்குக் கீழமைந்து அவனுக்குத் தலைவணங்கவல்லோபோகிறீரென்று சொல்லி அவரை இழிவுபண்ணினார்கள்."

மகமது நபியும் விடேன்தொடேனென்று பேசப்பேசச் சனங்களுக்குள்ளும் எரிச்சல் அதிகப்பட்டபொழுது அவரோ மெத்த மனமடிவுகொண்டதினால் அன்றைக்குந் தன்னுடைய சம்பிரதாய எத்துத் தட்டுகளைக் காரியப்படுத்தக்கொள்ளமுன்னே சனமெல்லாங் கலக்கடிகொண்டு கூட்டங்கலைந்து போய்விட்டார்கள். இப்படியே அன்றைக்குந் தன்காரியம் வாயாதிருந்துஞ் சற்றெங்கிலுந் தயிரியவீனப்படாமல் மக்கநகரியிற் சனங்களுக்கு முன் நின்று அதிகம் வெளியரங்கமாய்ப் பிரசங்கம்பண்ணினார். எப்படியெனில், "சருவவல்லமையுள்ள கருத்தா பூமியின் கண் என்னைத் தமது தீர்க்கதரிசியாயிருக்கவும் தெய்வவஸ்து ஏகாத்துவமென்பதை வெளிப்படுத்தி நிசப்படுத்தவும் விக்கிரகவணக்கங் கேட்டை வருவிக்குமென்பதைப் பிரசங்கித்துச் சனத்தைப் பயமுறுத்தவும ஏக சத்திய மதத்தைப் பின்பற்றும்படி சனத்தை மறுபடி அழைக்கவும் விசுவாசிகளுக்குப் பரதீசின் நற்செய்திகளைக்கூறவும், செவிடருக்கும் அவிசுவாசிகளுக்கும் ஆண்டவனுடைய பயங்கரப்படத்தக்க கோபப் பழியிறங்குமென்று சொல்லிஅவர்களைப் பயமுறுத்தவும், பராபரன் என்னை அனுப்பினார்" என்றுசொன்னார்.

பராபரன் ஒருவருண்டென்றும், அவர்மாத்திரமே துதியம்பண்ணப்படத்தக்கவரென்றும், விக்கிரகாராதனை அழுக்கான அரோசமாயிருப்பதால் அதை வேரோடு களைய வேண்டுமென்றுங் கோறானிலே கண்ட மேலான போதனையாயிருக்கின்றது. இன்னுங் கோறான் பன்னிரண்டாம் அதிகாரத்திலே பராபரன் ஒருவர்மாத்திரமுண்டென்பதைப்பற்றிச் சொலலியிருக்கின்றது. அந்தப்பங்கு கோறானில் அடங்கிய மற்று மூன்றுபங்கிலும் மெத்தப் பேறுனதாயிருக்கிறபடியால் மகமதுமதத்தார் அதற்கு மெத்தக் கவனஞ்செலுத்துகிறார்கள் அவையாவன, "இரக்கமுள்ள பராபரனின் நாமத்தை முன்னிட்டுக்கொண்டு பராபரனொருவரென்றும், அவர் அனவரதகாலமுமிருக்கிறவரென்றும், அவரைப்போல வேறொருவருமில்லையென்றுஞ் சொல்லுங்கள்" இதைப்பிடித்துத் தானே மகமது நபியும் மோசே, கிறிஸ்துநாதர் என்பவர்களுக்குப்பின் தான்மாத்திரமே ஏகசத்தியமுள்ள தீர்க்கதரிசியென்றதாகச் சொலலியிருக்கிறார். "நியாயப்பிரமாணத்தையும், ஞானத்தையும், தீர்க்கதரிசனத்தையும் அடக்கியிருக்கிற புத்தகத்தை நாங்கள் இஸ்ரவேற் பிள்ளைகளுக்களித்தோம நாங்கள் அவர்களுக்கு நற்பதார்த்தங்களைப் புசிக்கக்கொடுத்து சகலசாதியிலும் அவர்களை மேலானசாதியாக்கினோம். மார்க்கத்தைப்பற்றிய ஒழுங்கையும் அவர்களுக்குக் கொடுத்தோம். இதன் பிறகு மகமதுவே, நீரோ மார்க்கவொழுங்கைப்பற்றிய நியாயப்பிரமாணத்தைச் சகலருக்குஞ் சொல்லிக்கொடுக்கிறதற்கு உம்மை நாம் நிலைநிறுத்தினோம ஆகையினாலே நீர் அத்தைப பின்தொடருவதேயலலாமற் பேதைகளுடைய ஆசை பதத்தை நாடித்தேடாதே"—இன்னும் மகமது நபிசொன்னது நான் உங்களிடத்துக்கு அனுப்பப்பட்டநோக்கமென்னவேயாகில ஆதாந்தொடங்கிக் கிறிஸ்துநாதர்வரைக்குங் கோத்திரப்பிதாக்களுந் தீர்க்கதரிசிகளும அனுசரித்துவந்த ஏகசத்தியமும் பூருவமுமான விசுவாசத்தைத் திரும்பக்கொடுக்கிறதற்கேயல்லாமல ஒரு நவமதவொழுங்குத் திட்டபட்டத்தை ஏற்படுத்திக்கொடுக்கிறதற்கலலவென்றுஞ் சொன்னார், எப்படியெனில "மக்காவின் இராசமா நகரியிலும அதைச் சூழந்தும் வாசம்பண்ணுகிற அரபியர்களை எச்சரித்துப் புத்திசொல்லும்படிக்குக் கோறானை நமக்கு வெளிப்படுத்தினோம ஆபிரகாமுக்கும, மோசேக்கும, கிறிஸ்துநாதருக்கும கொடுத்திருந்த மதத்தை உமக்குந் தந்தோம் இந்த மதத்தை அனுசரியுங்கள். வேறுபட்டிராதேயுங்கள், ஆகையினாலே சத்திய விசுவாசத்துக்கு வரும்படி அவர்க

ளை அழைத்து அவர்களைப்பற்றி மிகவுங் கவலையாயிரும்"—உண்மையான விசுவாசத்திற்கு வருகிறதற்கு வழியென்னவென்றால் அராபியருடைய விக்கிரகநோக்கத்தையும் யூதர்களுடையவுங், கிறிஸ்தவர்களுடையவுங் கேடுபாடான நடைகளையும் விட்டுவிடுவதேயல்லாமல மற்றும்படியல்லவென்று மகமது நபியுஞ் சொன்னார்.

---

## கூட்டேன்பவர் செய்த பிரபஞ்சநூல்.

## Abridgement of Good's Book of Nature.

### இரண்டாம் பிரிவு—இரண்டாம் அதிகாரம்.

விலங்குசாதியின் விசேடலட்சணம்-௰௮ம்பக்கத்தினின்று.

௰௧. பட்சியினத்திலாறுவகையுண்டு. முதலாவது, மாமிசபட்சணபட்சிகள். இவைக்குச் சொண்டு சற்றே கீழே வளைந்து பாதத்தின் நாலு விரல்களும் வளைந்து கூர்ந்திருக்கும். ஏகாந்தமாய் உயரப் பறந்து வெகு தூரத்துக்குப் பார்வை செல்லக் கூடிய பெருமிதமான கழுகு இவ்வகையைச் சேர்ந்தன. அறிவாளியென்று ஓர்காலத்திற் கீர்த்தி பெற்ற கூகையுமிதற்குச் சேர்ந்தது. இப்பேர் அதற்குண்டானது அதினுய்ந்த நோக்கினாலாயிருக்கும், அதினாலது நிசமாக மந்தமும் மடமையுமுள்ள பட்சியாயிருக்கின்றன, அப்படியே இப்பொழுதெண்ணப்படுகின்றது. உலகமெப்போதும் அனுப்புக்கிடங்கொடுக்கமாட்டாது.

௰௨. இரண்டாம் வகைக்குப்பேர் கத்துவான் இதற்குச் சொண்டொடுங்கித் திரண்டிருக்கும். கிளிக்குலமும், பரதீசுக் குருவியும், அண்டங்காக்கையும், தச்சன் குருவியும் சகல பட்சியினத்திற் சிறிதுஞ் சிறப்புமான சிட்குருவியும் இவ்வகையைச் சேர்ந்தன.

௰௩. மூன்றும்வகை தோலடிப்பறவை. இதில் வாத்துச்சிறகைமுதலாக நுனிபரவி வீங்கித் தோன் மூடிய சொண்டுந் தசைநாக்குந் தோலடியுமுள்ள பறவைகள்யாவுமடங்கும். இவ்வகையிற் பட்சிகளில் அன்னம் விசேடித்தது இதில் மூன்றுவிதமுண்டு அழகும் மகத்துவமும் வெண்மைநிறமுமுள்ள வீட்டன்னமும், சொண்டுநுனியுஞ் செட்டை நுனியுஞ் சாம்பனிறமுமுள்ள காட்டன்னமும், நவ ஒலாந்துதேசத்தின் காரன்னமுமே.

௰௪. நீராடிகள் நான்காம்வகை. இவை திரண்டசொண்டும் தசை நாக்குமுள்ளவையாய் முழங்காலுக்குமேல் உரோமமற்றவைகளுமாயிருக்கின்றன. கூழைக்கடா, நாரை, கண்டபத்திரி, உள்ளான் இன்னம்பலவுண்டு. சொக்கைக்காலியும் இவ்வகைக்குச்சேர்ந்தது அது எகிப்துத்தேசத்திலுள்ளது. அநேகசதாத்தங்களுக்கு முன் எகிப்தியர் அத்தைத்தெய்வமாக வணங்கிவந்தார்கள். அப்படிச்செய்தது அது நீலநதிக்கரையின் கழனியிலுள்ள பூச்சிபுழுக்களை அழித்தபடியினாலாயிருக்கும் அது நன்மைசெய்தது.

௰௫. வீட்டுப்பட்சிகள் ஐந்தாம்வகை. இவைக்குச் சொண்டுதிரண்டும் மேற்சொண்டு வளைந்துமிருக்கும். எங்கள் கோழியினமெல்லாம் இவ்வகை, அப்படியே மயில், காடை, உயர்ந்த தீக்குருவி என்பவை இவ்வகையைச்சேர்ந்தன.

௰௬. கடைசியானது குருவிவகை. இது பெரும்பாலும் சிறுபட்சி அல்லது கீதபட்சிகளுள்ள பலவகையுங்குலமுஞ் சேர்ந்தன. இதில் வானம்பாடி, கபோதம், காளபதம், பலவகைச் சிறு குருவி, செம்மருமி, சின்னட்டாங் குருவி. அன்றில் கீதபட்சிகள் யாவிலும் நூதனமான சரபப்பட்சியுங் காணலாம்.

௰௭. பறவைகளின் சரித்திரம்பொழுதுபோக்கலுக்கும் படிப்பினைக்குங் கூடியது. நாம் பட்சிகளைப் பற்றிச் சொன்னது கொஞ்சஞ் சுருக்கமாயிருந்தாலும் இதை வாசிப்பவர்கள் அவைகளின் இயற்கைகளைப்படித்தறிய ஏவப்படுவார்களென்று நம்புகிறோம். பறவைகள் அதிசயமாயுண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவை வாயுவிற் சஞ்சரிக்கவும் பரந்த சமுத்திரத்தைத் தாண்டவும் தம்பிரியத்தின்படி பூமியிற் பற்பல தேசத்தையுங் காணவுங் கூடியவையாயிருக்கின்றன. சின்ன அடைக்கலான் குருவி வருடமிருமுறை அத்துலாந்திக்குச் சமுத்திரத்தைத் தாண்டி இருபத்துநான்கு மணித்தியாலத்தில் எழுநூறு மயில் வீதம் பறக்கின்றன.

[இன்னும் வரும்.]

---

[The following article is the original of the foregoing.]

## ABRIDGEMENT OF GOOD'S BOOK OF NATURE.

Part II.] *The distinctive character of animals.* [Chap. 2.
*The subject Continued.*

[Continued from page 18.]

11. There are six orders in the bird class; first, *birds of prey*. These have a bill somewhat hooked downward, and four claws hooked and sharp pointed. The proud, soaring and far-seeing eagle belongs to this order; so also does the owl, once famed as the bird of wisdom. It probably gained this character in consequence of its solemn look, for it is in reality a dull, stupid bird, and is now so considered. The world cannot always be deceived by pretension.

12. The second order, called *pies*, is distinguished by a bill compressed and convex. The parrot tribe, the bird of paradise, raven, woodpecker, and that smallest and prettiest of all the class, the humming bird, belong to this order.

13. The third order, *web-footed*, includes the goose, penguin, in short, all birds that have the bill covered with skin broad or swelling at the tip, a fleshy tongue and a web-foot. The swan is the most distinguished bird of this order. There are three kinds; the tame swan; a beautiful and majestic creature always white; the wild swan, beak and wing tips ash-colored; and the black swan of New-Holland.

14. The *waders* form the fourth order. These have a roundish bill, a fleshy tongue, and legs naked above the knees. The heron, crane, ruff, snipe, and many others may be named. The ibis belongs to this order; it is a native of Egypt, and many centuries ago, the Egyptions used to worship this bird as though it were a god. The rea-

son probably was, that it destroyed the reptiles and insects which bred in the slime on the banks of the Nile. It did good.

15. The *gallinaceous birds* form the fifth order. These have a convex bill, the upper mandible crooked. Our poultry are all of this kind; so are the peacock, quail, and the stately ostrich.

16. The last order is called *passeres;* it includes various kinds and families, for the most part called small birds and singing birds. There may be found the lark, pigeons, doves and many of the finches, the robin red-breast, the little wren and the nightingale, and that most curious of all the songsters, the mocking-bird.

17. The history of birds is full of amusement and instruction; and we hope our descriptions, few and brief as they are, will nevertheless awaken our young readers to study the habits of this class. Birds are wonderfully made. They can range through the air, cross the wide ocean, and visit all climates of the earth at their pleasure. The little swallow crosses the Atlantic twice every year, flying at the rate of seven hundred miles every twenty-four hours.

(To be continued.)

---

**Exhortation to the Hindus to receive the Christian Religion, by a Native Convert at Madras, translated from No. V. of the "Native Herald."**

**சென்னைநகரியிலுள்ள ஓர் இந்துக் கிறிஸதவன்கிறிஸதுமதத்தை அநுசரிக்கும்படி இந்துக்களை எச்சரித்தது.**

இந்துமதத்தவர்கள் செய்துகொண்ட பாவத்தினாலும் அகோரசத்தினாலும் அவர்கள் பராபரனோடே கொண்டிருக்க வேண்டிய அன்னியோன்னியத்தை வெகு காலத்துக்குமுன்னே இழந்தும் அத்தை அவர்கள் கொஞ்சமெனினுந் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி பராபரன் தமது ஞானத்தைக்கொண்டும், வேதாகமத்திற் கூறியபடி தமது குமாரனாகிய யேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்கொண்டும், அப்போஸ்தலர் குருமார்களைக்கொண்டும் ஒரு வழியை உண்டாக்கியிருக்கிறார் ஆகையினாலே, கிறிஸ்துமதமோ இந்து மதமோ எது சத்தியமுள்ளதென்றும், நித்திய நரகாக்கினைக்குத் தப்பிக்கொள்ளும்படி நல்ல அமிழ்தத்தை நிகர்த்த வழியெதிற் கூறப்பட்டிருக்கின்றதென்றும், ஆராய்ச்சி செய்யும்படி நாங்கள் எங்கள் சுதேசசகோதரரை அருட்டிவிடுகிறோம். இதோ இரட்சிப்பின் நாள் இதோ நற்பிறியமான காலம். ஆண்டவனோ மிகவும் பயங்கரப்படத்தக்கவராயிருக்கிறபடியால, நாங்களோ கரிசனையுடனே ஆக்கினைக்குத் தப்பிக்கொள்ளும் ஏகநெறிக்கு வாருங்களென்று அவர்களைக் கூப்பிடுகிறோம். கிறிஸ்துவின் சுவிசெஷத்திற் காட்டிய பராபரனுடைய நன்மையையும், இரக்கத்தையும் நாங்கள் ருசிபார்த்து அது மெத்த இதமும் யோக்கியமுமுள்ளதென்றுங் கண்டபடியால் நீங்களும் எங்கள் பரமானுபவத்திற் கூறுகொள்ளும்படி விருப்புற்றவர்களாயிருக்கிறோம். உத்தம விசுவாசத்திடனே நாங்கள் அனைவரும், ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவில் அன்பு கூருகிறவர்களுடன் ஒருமனப்பட்டுச் சேர்ந்துகொண்டு, இந்து தேசத்திலிருக்குங் குமாரருங் குமாரத்திகளும் அழிந்து கெட்டு மோசத்துக்கேதுவாயிருப்பதினால் அவர்களுக்காக நாங்கள் புலம்பி அழுகிறதை எங்கள் பரம பிதாக் கேட்கும்படிக்கும், பாவச்சுமையினால் அமிழ்ந்தி அடியற்ற பாதலத்திற் றாழ்ந்திருக்கிறவர்களுக்கு ஒரு இரட்சகர் வேணுமென்று சிலர் பராபரனை நோக்கிக் கூவென்கும்படி பண்ணி நெட்டுயிர்ப்பெறிந்து மரண நிழலிலும் அந்தகார இருளிலும் இருக்கிறவர்களுக்கு வெளிச்சங்காண்பிக்கும்படி நீதியின் சூரியனாகிய யேசுக்கிறிஸ்துநாதர் அமிழ்தத்தோடு சீக்கிரந் திரும்பி வரும்படிக்கும் நாங்களெல்லாரும் எங்கள் சத்தத்தையேறெடுத்தோலமிடுகிறோம்.

---

**On Tamil Classics.**

**இலக்கியக் களஞ்சியம்.**

நேமிவட்டஞ்சூழ்ந்த பூமி வட்டமெங்கும் உதயதாரகையென்னும் ஒளியை நிறுத்தி மூலவாப்புகழுள்ளமுகாமைத்துரைகளே,

பற்பலவிலக்கியங்களுக்கு மூலாதாரக்கருவி நூற்களாகிய அரும்பொருள் விளக்கத் தீபிகை, அரும்பதவட்டவணை, ஆசிரியநிகண்டு, ஔவைநிகண்டு, பொதியநிகண்டு, உரிச்சொனிகண்டு, பிங்கலநிகண்டு, சூடாமணிநிகண்டு, வயித்தியநிகண்டு, பொருட்சுவைச்சூடாமணி, சொற்பொருட்சிந்தாமணி, திவாகரம், கயாகரம், இரேவணசித்தர் சூத்திரம், வயித்தியவகராதி, சூத்திரவகராதி என்னுமிந்நூற்களின்கண்ணேயருகிநிறைந்த வருமபதங்களும் அப்பதங்கள் பிரயோகப்பட்ட பற்பல விலக்கியப்பாடலகளும சிறுவர் முதலானவர்களெளிதி னுணரும்படிக்குச் சிற்றறிவிற் புலப்பட்ட மாத்திரம எடுத்துக்காட்டுகின்றனம்.

**(ஆசிரிய நிகண்டு)**

மதிசகன் மகரகேதனன் மதிக்குடையோன் மனோபவன் வேனிலாளி—மனுபு திருமான்மகன் பூவாளி பூமான் வயங்குதென்றற்றேரினன்—அதிராழிமுரசினன் மதனன் மோகன் காமனபிதானமிருபதொன்பான்—அடர்காமன் மகிழ் தம்பியே சாமனுமிரதிய வடங்கை தேவதாரி கதியுடைத்தேவர்மேற் பூவின் மாணிடா கண்மேற்கருப்புவிலிராக்கதா கண்மேற்—காமுறு மிருப்புவில் வண்டு நாண் பூட்டுகணை கஞ்சமலர் சூதமலர்வான்—பொதியவிழ சோகமலர் முல்லைமலர் நீலமலர் பொருபஞ்சபாணமன் றிப் போற்றுமல்லிகை நெய்தன் மறுகணையிரண்டுடன புகலமேலழ்பாணமாமே.

இச்செய்யுட்கண்விசேடம்—மன்மதனுக்கு மூன்றுவில்லும் சத்தபாணமும் வந்தவை கண்டுகொள்க.

**(கிருட்டினன்றூது)**

துன்றுபிணியோர் துறந்தோரடங்காதோர்
கன்றும் வைரமனத்தோர் கல்லாரிளையோர்
ஒன்றுமுறைமை யுணராதவர்மகளிர்
என்றுமிவரந்தணத்தி னெய்தபெருதாரே.

இப்பாடலில் அருமபதம் அந்தணம் அதற்குதாரணம் அரும்பொருளட்டவணை—அந்தணமென்ற தந்தரங்கபொருளாலோசனையுமதற்கேயறைவா.

**(ஆசிரிய நிகண்டு.)**

மாறினுன்மத்தமொடு மதனஞ்சமோகமே மருவுசந்தாபத்துடன் வசிகரணமைந்து மலர்க்கணைப்பெயராம் வகுப்பரிய சுப்பிரயோகம்—வீறுவிப்பிரயோகமே சோகமோகம் விலக்கரியமரணமைந்தும் விளம்பியமலர்க்கணையவத்தையின்பேராம் விதித்த சுப்பிரயோகமே—கூறிடிற் சொல்லுநினைவும் விப்பிரயோகங் குணமவெபாதுயிர்த்திரங்கல் குறித்திடுஞ் சோகமலர் துய்ப்பவைதெவிட்டன் மெய் கொதித்தேவெதுப்புவருதல்—பேறுடையமோகமேயமுதன்மொழி பலபல பிதற்றன்மரணத்தின்குணம் பேசிடின்மயக்கமொடு மாழ்தலிருவகையென்பர் பீடுறும்புலமையோரே.

இக்கவி காமன் கணைநாமமும்-அக்கணையவத்தையும் அவத்தையின்குணமுங் காட்டியிருக்கின்றது கண்டுகொள்க.

இனிமேல் இலக்கணக்களஞ்சியமும் இலக்கியக்களஞ்சியமும் மாறிமாறி வரக்காட்டுதும்.

இப்படிக்குக்
களத்தூர் சுவாமிமுதலியார்குமாரன் * அட்டாவதானி

* அட்டாவதானமரிதன்று சாதகஞ்செய்யிற் சிறுவருஞ்செய்யலாம். இவ்விதியும் வரைவோம்.

---

(Answer to a question on Tamil Grammar in No. 2. Vol. II.

(இலக்கண வினவிற்கு விடை.)

மகா கனம்பொருந்திய முகாமைக்காரரே சங்கர நமச்சிவாயர் விருத்தியுரையைத் திருத்திய வுரை

ஆறனுருபு மேற்குமவ்வுருபே,

என்னின் மேற்கூறியவேற்றுமை யுருபெட்டனுள் எழுவாயுருபேயேனையுருபுகளையுமேற்குமென்பதுணரற்று—இ—ள்—எழுவாய் வேற்றுமையாவது பெயர் மாத்திரையாய்த் தோன்றி நிற்கு நிலையென்பவாகலினவ்வெழுவாயாய் நின்ற வுருபே ஐம்முதலிய ஆறுவேற்றுமைகளினுருபு மேற்குமென்றவாறு. எனவே விளியுருபாவது பெயரதுவிகாரமேயாதலினவ்வெழுவாயுருபின் வேறல்லவெனவும் படுமென்பது பற்றியாறனுருபுமேற்குமவ்வுருபேயென்றார். இச்சூத்திரத்திற் கிவ்வாறுபொருள்கொள்ளாது பெயரேயன்றி ஆறும்வேற்றுமையுருபுமவ்வுருபுகளையேற்குமெனப்பொருள் கொண்டு—சாத்தனது—சாத்தனதை—சாத்தனதால்—சாத்தனதற்கு—சாத்தனதனில—சாத்தனதனது-சாத்தனதன்கண்—சாத்தனதே என வுதாரணங்காட்டுவாருமுளர்—உருபேற்றல் பெயர்க்கேயுரிய இலக்கணமன்றி வினைமுதலியவற்றிற்குரிய விலக்கணமன்றுமாதலானும்—பெயர்வழித்தமபொருடரவருமுருபேஎன்றும்—ஏற்குமெல்வகைப்பெயர்க்கு மீறுயப் பொருள்வேற்றுமை செய்வனவெட்டே வேற்றுமை என்னும் வரையறைகூறிப் போந்தமையானு மீண்டிடைச்சொல்லுருபேற்கு மெனின் மாறுகொளக் கூறலாமாதலானும் சாத்தனதை சாத்தனதால் சாத்தனதென்பது குழையதுகோட்டதுஎன்றாற்போலத் துவ்விகுதியும் அகரச்சாரியையும் பெற்றுநின்ற வினைக்குறிப்புப் பேராமாதலானுமன்றியுமுருபேற்புழிப்பெயர்போலத் தனித்து நின்றுருபேற்றல் வேண்டுமாதலானும அதனை அதனால் எனவுருபேற்கு மெனின் சுட்டுப்பெயருருபேற்றதாமன்றியுருபுருபேற்றதன்றுமாதலானும அது பொருந்தாதென்க—என்று சிவஞானதேசிகர் திருவாய்மலர்ந்தவுரையே திறம். தொன்னூல விளக்கத்தாரொருமதம்பற்றிக் கூறினரஃது மொருவாற்றாற் றிறம். மகா கனம பொருந்திய தமிழ்ப் புலவராகிய றி, றி. விசாகபெருமாளையர் அவர்கள் செய்த நன்னூற்காண்டிகையுரையுஞ் சரியே.

உரையாசிரியர்களு நூலாசிரியர்களும் ஒவ்வொரு விகற்பங் கூறியிருப்பினுந் தத்தமதென மாணாக்கர்கள் கைக்கொள்வது கடமையே. இப்படிக்குத்தமிழ்ப்புலவர் வேதகிரிமுதலியார்.

---

(A Rejoinder to the article on Tamil Grammar in No. 4. Vol. II. Page 41.)

நியாயமற்ற சமாதான நிராகரித்தல் என்பதற்கெதிர்மொழி.

முகாமைக்காரரே,

சோடசாவதானப்புலவர் முதலிய பற்பல வித்வனர்கள் இடையெழுத்திற்கினமில்லையென்ற உண்மையை மறுத்து யாழ்ப்பாண மாணாக்கனுக்கும் நீதிப்பிரியனுக்குமாக இனமுண்டென்று பட்சபாதஞ்சொன்னார்களே. அவ்விடையினத்திற் கினமுண்டேல அவ்வினத்திற்குப் பெயரின்னதென்றும் அதற்கும் ஆறெழுத்துத்தானே அதனினுமதிகமோவென்றுங் காட்டவேண்டுமே. அப்படிக் காட்டில் அட்சரத்திற்குப் பத்துப் பவுண் நன்கொடைபண்ணலாம். இதைப்பற்றியுந் தொடரலாம். வல்லினமாறு அதற்கு வேற்றினமாகிய மெல்லினமாறு இவ்விரண்டிற்கு நடுவாகிய இடையினமாறு ஆக மூவாறு பதினெட்டுமெய்யுஞ் சரி, அதனமுண்டோவென்று அரிச்சுவடியிலவதானம் பண்ணலாம் அது அதிகநலம். இதற்கு விலகி யகரத்திற்கு ரகரமும் லகரத்திற்கு வகரமும் ழகரத்திற்கு ளகரமும் இனமாமென்று புலவர்கள் சொல்லியது இடையினத்திற் கினமுண்டோவென்னும் வினவிற்கு விடையாமா? அதுவா புலமை? அது விவேகிகட்கு விடைவழுவல்லவா? அன்றியும் அப்படி இடை யெழுத்துக்களிவ்விரண்டோவ்வோரினமாமென்றதும், பெரியதப்பு. அஃதேதெனின் இடையெழுத் தாறனுக்கும் இடமுமாத்திரையு மொத்தருத்தவானும், வேடலவேரல் என வருதலால் யகரத்திற்கு ரகரமும் செல்லம் செல்வம் எனவருதலாலும் கல்வலிது எனறதனுலும லகரத்திற்கு வகரமும் குழகன் குளகன் எனவருதலால் ழகரத்திற்கு ளகரமும் இனமாமெனக்கூறின் அலமரல் அளமரல் எனவருதலால் லகரத்திற்கு ளகர மினமாமென்றும் வேய்வலிது வேர்வலிது ஊழ்வலிது தாள்வலிது என்பனவற்றால் வகரம் யகரரகரழகரளகரங்கட்கு மினமாமென்றுங்கொளவேண்டுதலானும், இடையெழுத்துக்களிவ்விரண்டோவ்வோரினமாமென்று பெரிய புலவர்கள் சொல்வதடாது. இன்னும் வல்லினத்திற்கு மெல்லினம் வேற்றினமாய் நிற்பதுபோல அவர்கள் குதர்க்கமாய்ப் பிரித்துக்காட்டிய இடையினத்து உட்பிரிவுக்கு வேற்றுப்பொருளாகிய காரணமில்லையே. என்ன கருக்கொண்டிரண்டாய்ப் பிரிந்தது? ஒருவருடைய பொருமை அதற்குக் கருவாமா? அடிநொச்சி நுனி யாமணக்கென்று மயங்குகிறார்களே. இப்படி இடையினத்தைப் பகுத்ததும் ஒரு விற்பனந்தான். அவர்கள் தொல்லாசிரியர்களமைத்த இடையெழுத்தாறனுள் ளுமினமென்று பிரித்தெடுத்த மூன்றெழுத்திற்கு இரண்டு காரணமிருக்கையால் ஒன்றையொன்று நிராகரித்துக் கற்பனுகௌரவமென்னுந் தோஷத்தைக் கொடுக்குமே. இவைகளை யறியாதிருந்தாற் புலமையல்லவே, தனக்கு மூக்கற்றாலுஞ் சத்துருவுக்குச் சகுனத் தடையாவது போல இடையினத்திற் கினமுண்டென்று பூவின்றி மாலை தொடுத்தார்களே. கருத்தாகிய குருத்துண்பானுக்குக் காவோலைச் சூத்திரங்களேன்? வேணுமெனில் அடிதொடுத்துக் கலகலக்கும். அதிலுங் குறையாது. இதற்கு மெய்ச்சாட்சி வடமொழி தென்மொழியில் வல்ல தெய்வீகப் புலவர் விசாகப்பெருமாளையரும் தாண்டவராய முதலியாருமே, இவர்கள் உண்மை சொல்வார்கள். அதற்காதரவு இவர்களாற்செய்யப்பட்ட இலக்கணச்சுருக்க வினவிடையும* இலக்கணவினவிடையும்† இனமில்லையென்றே சொல்கின்றன. புலமைக்கிணங்க இப்படி யூகித்துணராமல் நினைத்தபடி நிராகரித்து நிந்தனைசெய்வது புல்லறிவாகையால் அவர்கள் பெயருக்குத் தாழ்ச்சியாமே. இது துக்கம் ஏனெனின் அருமருந்தனன் பிள்ளை அருமந்த பிள்ளையென்று அடைநிற்க இடைச்சிதைந்து மருவினது போலப் புலவரெனறபெயரும் மரூஉமொழியாய்விட்டதே. இவை நிற்கச் சோடசாவதானங்களில் வல்லவருமுளரா? ஆச்சரியம்! மற்றும் பெரியோர்களைப்போலக் கதிர்காமத்தலத்தை நோக்கியாயினுமவரின் இப்படிப்பட்டவல்லமைகளைப்பார்த்து எங்களாலியன்றளவு பண்ணிச் சோமனச்சோடு கொடுத்தனுப்புவோம்.

யாழ்ப்பாணம் நல்லூர் } இப்படிக்கு
௲அஉ௱ம் ௵ மாசி௴ உசதி௳ } அவன்தான்.

* ௯ம். பக்கம். † ௬ம். பக்கம்.

---

[Refutation of an Article on Tamil Grammar in No. 24. Vol. I.]

(இடைக்கணத்திற் கினங்காட்டல்.)

கனம்பொருந்திய கல்வியிற் சிறந்த முகாமைப் பிரபுகளே,

நல்லூர் மனப்புலிமுதலியார் சரவணமுத்தென்றவர், இலக்கண நூற்களுக்கு மாறாகவும், இயாழ்ப்பாண மாணாக்கருக்கு வேறாகவும் எலுமிச்சைக் கனிக்குப் புளிப்பில்லையென்றாற்போலும், எவி பூனையை வென்றாற்போலும் இடையினத்திற் கினமில்லையென்றுந் தீட்டினார். அன்றியும் ஏலாத விதியெடுத்துங் காட்டினார். நன்னூல் சிறப்பினு மினத்தினுமென்னுஞ் சூத்திரவிருத்தியை யோர்ந்திலார்போலும் இலக்கணவிளக்கத்துள் தோற்றமளவு செய்கையென்னுஞ் சூத்திரவிருத்தியைத் தேர்ந்திலார்போலும், அவர் அதிதிட்பமுள்ள இலக்கணச்சாட்சி சொலலவில்லையே, ஆகினும்-மதிநுட்பமுள்ள மாணாக்கர் சாட்சியை வெல்லவில்லையே. சரவணமுத்து என்பவர் சந்தேகமுற்றுமற்றுத் தேறும்படி சான்றோரிலக்கணச்சாட்சி காட்டுகின்றோம். அகத்தியம் அகரமுதனவ்வீறனமுப்பானுள், ஐ, ஔ, இ, உ. வ்வணைவொடு யற்றவை யிணை யிணை யிணைதவினமெனக்கொளலே. இச்சூத்திரப் பொருளால் இடையினத்திற்கினமுண்டென்பது தெளிவாய் விளங்குகின்றது. இதை அவரறிக இன்னும் பலவிலக்கண அத்தாட்சி வேண்டுமாயினு நகாட்டுவோம். புத்தியின் மிகுந்த யாழ்ப்பாண மாணாக்கரும் யுத்தியின் மிகுந்த நீதிப்பிரியரும் எழுதியவையுண்மை அவையே திண்மை. இப்படிக்கு மதுரை.

சோமசுந்தரம்பிள்ளை, } இருவர் கையொப்பம்
சொக்கலிங்கபண்டாரம், }

முற்றறிவுள்ள முகாமைக்காரரே.

நன்னூலுள் புலமையிற் சிறந்த பவணந்தி முனிவர் நேரினமணியை நிரல்படவைத்தாங் கோரினப்பொருளை யொருவழிவைப்பதோத்தெனமொழிப வுயர்மொழிப்புலவர்—என்று தாமே சூத்திரஞ்சொல்லி அணியிலக்கணத்துள் சொல்லவேண்டியபொருள்கோளெட்டையுஞ் சொல்லிலக்கணத்துட் சொல்லியிருக்கின்றார்.

அவர் ஒரு காரணங்கருதிச் சொல்லியிருக்கலாம்—அக்காரணம் எளியேனுக்குப் புலப்படாமையால் உங்கள் பத்திரிகையின் வழியாய் முற்றுணர்ந்த கற்றோர் சிற்றறிவோனுக்குத் தெளிவுற விளக்கும்படி விரும்புகிறேன், இப்படிக்கு, மதுரை அப்பாவுநாயகர் குமாரமுனிஷி சின்னசாமிநாயகர் கையொப்பம்.

---

(Answer to the question on Negandu in No. 18. Vol. I.)

மகவது, நிகண்டு.

உதயதாரகாதிபர்களே,

"அண்டசமுதலை" என்னுமத்தொடர்படியினுள்ளே, அந்நூலாசிரியர் "தொகுத்துச் சுட்டல்"என்னுமுத்தியைக்கொண்டு"புள்" எனப்பொதுப்படக் கூறினாரேனும் நன்னூல் எழுத்தியல் ருகூஞ். சூத்திரம் "நெடிலோடாய்தமுயிர்வலிமெலியிடை," என்பதனுள் "உயிர்" என்பதின் மொழிக்கிடைகடைகளின் வாராத ஔகாரவச்சையும்"இடை"என்பதின் வன்கணுக்கரங்களோடு தொடராத வகரவிடைக்கணுக்கரத்தையும் விலக்கினாற்போலப் புள்ளினின்றண்டமல்லாத வௌவாற் பறவையை வரைந்துகொள்க.

எறும்பை அங்ஙனமுடன் கூறுதுவிட்டாரேனும், எழுத்தியல் ருடுஞ். சூத்திரம் "குறியதன்முன்னராய்தப்புள்ளி' என்பதிற் புணர்ச்சிவிகாரத்தானுந் தூக்குவிகாரத்தானும் வருமாய்தங்களும் அவ்வியல் ருகூஞ் சூ "இசைகெடின்மொழிமுதலிடைகடை நிலைநெடில்" என்பதனுளின்னிசை சொல்லிசைகணிறைக்கவரும்புலுதங்களும, அவ்வியல எய. ஞ், சூ. "அம்முனிகரம" என்பதனுள் எகரஒகரங்களின்வடிவு தோன்றுதலையும புகலப்படாதிருந்தும் அவைகளை வருவித்துரைத்தாற்போல எறும்பு முதலான முட்டையிற்சநிப்பன யாவையுமுரையிற்கோடலென்னு முத்தியைக்கொண்டமைத்துத் திர்ப்தியடைக.

அன்றியும் பிறவும், என்பதனை இசையெச்சமாக்கி இப்பியுமீராரும் பிறவும எனக்கூட்டியுரைக்கினுமமையும்.அஃது சதுரகராதியிற்காணலாம. வௌவான முட்டையினாற்பவப்பதன்றென்பதற்குத் திருட்டாந்தம,க. ஏகாம்பரம் அவாகள் எழுதிய "தோற்காது போர்வை துளைக்காது முட்டை" என்னும் வாக்கியத்தால விளங்கும். இப்படிக்கு,

உடுப்பிட்டி திருவல்வை. } தாமோதரம்பிள்ளை சுதன்
கு. பள்ளிக்கூடம் } சிதம்பரப்பிள்ளை.

---

முகாமைக்காரரே இதற்குத் தயவுசெய்யுகள்.

வைத்தியலிங்கர் எழுதிய எதிர்விடைக்கு விடை.

நன்னூல் காண்டிகையுரையின் "வருங்குன்ற" என்னுஞ் செய்யுளைக் கட்டளைக் கலிப்பாவென்றிருக்கிறதச்சுப்பிழையென்றுங் கட்டளைக்கலித்துறையென்றிருக்கவேண்டுமென்று மெழுதிய,றீ, றீ, அ. முத்தையாச் செட்டியாருக் கெதிர்மொழியாக உடுப்பிட்டி வைத்தியலிங்கர் அச்சுப்பதித்த பின்பு பிழைபார்த்துக் கடைசியிற்சேர்த்திருக்கிற திருத்தலில் இக்காரியங்காணுதபடியால் அச்சுப்பிழையன்றென்று நம்புதற்கிடமுண்டென நவின்றார். அப்பிழை திருத்தலினில்லாத பிழைகணன்னூலினின்னமநேகமிருக்கின்றன, அவற்றுளொன்றென்னவெனில், அந் நன்னூல். பெயரியல். ருூ. சூத்திரம். "ஒருமொழிதொடர்மொழி" என்பதற்குதாரணமாக "எட்டு-தாமரை-வேங்கை-எழுந்திருந்தான் எனவருவன தொடர்மொழிகள்" என்றிருக்கின்றதே. ஆயின் அவ்வுதாரணச்சொற்கள்பொதுமொழியென்றிருக்கவேண்டும். இதுபோலவே கலித்துறை என்பதைக் "கலிப்பா"என்றச்சுக்கோத்தவர்கள் மோசமாக்கினார்கள், செட்டியார் நியாயத்தோடு கூறியவையைப் பிதற்றுகிறார் என்று அவ் வைத்தியலிங்கர் வீணாகச் * சத்தியுண்டாகுமென்பதற்குக் "கடையங்குறைந்த சத்தியம்" என்று பிதற்றவேண்டியதென்ன. அம்மாணுக்கன் செட்டியார் "போன்" என்பதைப்பற்றி வினாவிய காரணம் விளங்கிலான்போலும். அஃதென்னெனில் அச்சுப்பிழையுண்டென்பதை வலியுறுத்தும்பொருட்டே. அதற்குத் திருட்டாந்தம் றி. றி. தமிழ்ப்பண்டிதர் வேதகிரி முதலியார் அவர்களை வினாவி பதிலும் வைத்தியலிங்கர்க்கெழுதிய விடையோடுசேர்த்தெழுதியதினாலுங் காண்கலாம். அன்றியும் அவ்வைத்தியலிங்கர் "போன்" என்பதைப் பிழையாகப் "போன்ம்" எனத் திருத்தியிருக்கிறார். அதுவும் வழுவாக இருக்கின்றது. அதுநிற்க, சங்கரநமச்சிவாயரவர்கள் "ஆறனுருபு என்னு நன்னூற் சூத்திரத்திற்கு "ஆறனுருபு" முதற் பெயரொடு கூடி எல்லா உருபுகளையுமேற்குமென்று சொல்ல இதற்கு அற்ப வித்தியாசமாகத் தொன்னூல் விளக்கத்தில் ஆறனுருபு முதற்பேரோடு கூடி ஐம்முதல்கண்ணீருகிய ஆருருபுகளை மாத்திரமேற்கும் என்று சொல்லியிருக்கின்றதென்று உடுப்பிட்டிமாணுக்கராகிய தியாகராயன் என்பவர் ஓர் கடாகடாவினார் தொன்னூல்விளக்கத்தின் ஆறனுருபு அன்சாரியைபெற்று ஆலுருபுகளைமாத்திரமேற்குமென்றார் அன்சாரியைபெறுதாயின் எட்டுருபுகளோடும் வருமென்பதுதானே விளங்குதல்காண்க அப்போது விருத்தியுரையோடொத்தல் காண்க.

* "சிவமெனும்பொருளுமாதி சத்தியொடுசேரிலெத்தொழிலும் வல்லதாம்" என்னும செய்யுளை அவ்வைத்தியலிங்கனறிந்து மறந்தான் போலும்.

யாழ்ப்பாணம் இப்படிக்கு
சஉம் ஆ இலக்கணவிநோதன் அல்லது நீதிப்பிரியன்
தை மீ யகூ தீ கா. பிலைருடி

---

இலக்கணத்திலோர்பகுதி.

நவநீதப்பாட்டியல். ங. வது நூல்செய்யுமுறை.

துரைகளே,

கோல்குடைகோவணம்நான்மறைமூர்த்திகுசைதருப்பை
மால்கழல்வாழ்த்தவிரண்டுபிறப்புபவாசமினித்
தோலைந்துவேள்விகாகமாவிந்ததொல்கோத்திர
நூலிருமூன்றுங்கவேதியர்க்கோதுவர்நூலவரே.
ஈதலுமோதலும்வேட்டலுமூன்றுமியற்றுவிப்பார்
ஆதலுமங்கி அயனோடுவமையுமன்னவரென்
றோதலும்பூசுரரென்றவர்நான்மறையோர்க்குரிய
போதிலும்பாதிலும்நாவிலுமேவும்புனையிலையே.

இது அந்தணர்விதி.

பூவைநிலைபகலோன்கழல்வாழ்த்தல்புனைதன்முடி
தேவருவமைசிங்காசனஞ்செங்கோல்குடைகவரி
காவலளித்தலெறிவேட்டலோதல்கடலமுத
மேவலடுகளம்வேட்டல்பண்பாயினவேந்தருக்கே.
விளங்கிய நால்கற்றல் வேதநெறிநின்றறுசமயம்
உளங்கொடுபோற்றலமைச்சருரைகோடலோர்ந்துகுடி
தளர்ந்ததுதாங்கன்முறைமைகோடாத்தனம்பெருக்கல
அளந்துபெரும்படையாக்கலரசற்கமைத்தனவே.

இது அரசன்விதி.

இருபிறப்போதல் எகவேட்டுதவிருநிதியம்
வருதிறத்தாயினவாணிகஞ்செய்தல்நிரைவளர்த்தல்
பெருநிதிக்கோன்கழல்பேணலவனென்றுபேசல்நிற்றல்
உரிமைதப்பாதவணிகற்கியல்பெனஓதினரே.
உறுவதுகோடல்வருபயன்கோடலுவவின்றேநூல்
உறுவதஞ்சாமவிட்டத்திற்றெருமரலுற்றபொறை
நெறிபலஓதல்முனிவிலநாதல்நிரைவளையாய்
குறியெனலாகுங்குலவழிகாகக்குவலையத்தே. இதுவணிகர்விதி.
திருந்தியநல்லறந்தீராதசெம்மைதீயோர்க்குடைமை
வருந்தியசுற்றத்தைஆற்றத்தன்மன்றத்திறையிருத்தல்
பொருந்தியஉற்றுமைக்கோடல்புகழும்வினைதுடங்கல்
விருந்துபுறந்தரல்வேளாளருக்குவிரும்பினவே.
வணிகஞ்செய்தல்குயிலுவங்காருகம்வாய்த்தசெய்கை
பேணியுழுதவிருபிறப்பாளரையேபிழையா
ஆணைவழிநிற்றலாளினர்போற்றலகன்றவல்குற்
பூண்முதலாயிவைவேளாளருக்குப்புகன்றனவே.

இது வேளாளர்விதி

இக்கவிகளினாற் பிராமணர் வேதமுறைப்படி நின்று விட்டுணுவை வணங்கவும் அரசன் வேதமுறையினின்று சூரியனையும சைவம், பாசுபதம், மகாவிரதம், காளாமுகம், வாமம், வைகவம் என்னும் மறுசமயப்படி வணங்கவும் வணிகன் வேத முறையில் நின்று

குபேரனை வணங்கவும் என்று காண்கின்றது. வேளாளர்க்குத்தெய்வமின்னதென பதுகுறிக்கவில்லை. ஆகையால் அவ்வருணத்தவனுக்குத் தெய்வமின்னதென்பதை உங்கள் தாரகைவழியாய்ப் பிரசித்தப்படுத்தித் தெளிவிக்க மன்றாடிக் கேட்கிறேன்.

பருத்தித்துறை. இப்படிக்கு
புலோலி பெற்றார் நரசிங்கம்.

---

☞இருவகையெண்களுண்டென்னுங் கணக்குக் கேள்வி பொருந்தாதென்னுங் குறிப்புக்கு மேற் குறிப்பு—எண்ணென்பது ஒருமை பன்மையினது முறைமை தோற்றத் தனித்தனியாய் நிற்கும் பொருள்களை, க—உ—ங என எண்ணலளவையிலடக்கி யெண்ணுமெண்ணவென்னும் வினையடியாற் பிறந்தபெயர். ஆகையால் எண்ணென்பதைச் சரிவர முதல் விளங்கவேண்டியது. எண்ணலுக்கு முதலுமடியுமாய் நின்று எண்களிற் குறைந்தது (க.) இதினது அம்ஸங்களையெண்ணெனச் சொல்வது பொருந்துமோவென்பதோர் வினா. பொருந்தாவிடத்து, மேலைக் கேள்வி பொருந்தாதென்பது பொருந்தும். ஆனாற் பொருந்துமென்னில்,மேற் குறிப்பையாவற்றிற்கும் பொருத்தி விபரித்துச் சொல்லாதது மோசம். ஆகையால் ஆகக் குறைந்த எண்ணாகிய (க)க்குக் கீழ்ப்பட்ட அம்ஸங்களைத் தொகுத்து அக்கேள்விகேட்டதாயின, அவ்வம்ஸங்கள் காணவழி.-இயாதொரு அம்ஸத்தை நினைத்தது அதின் வர்க்கத்தையொன்றிற் கழித்து நின்றசேடத்தை அவ்வம்ஸத்தினிரட்டிக்கொண்டு சேர்த்துப் பிறிக்க ஒரு அம்ஸம் வரும். அத்தை ஒன்றிற் கழிக்க மற்ற அம்ஸம் வரும். எண்ணென்ற சொல் அம்ஸங்களுக்குப் பொருந்தாததால் வேறு சூத்திரமும் அவற்றை விசேடக் குறிப்பாக முழுவிலக்கத்துக்குக் கீழ்ப்பட்டஎண்ணென்றுந்தொகையென்றும மேலைக் குறிப்பிலே காட்டி அதிற் கீழ் வித்தியாசமான எண்கள் வராஎன எண்ணென்னுஞ் சொல்லால் வித்தியாசப்படுத்தியெழுதினதை விளங்கிக்கொள்பவர்கள் உண்டானமோசத்தைப்பெரிதெனக்கொள்ளார்கள். மேலைச் சூத்திரத்தையெண்களிலமைத்துப் பார்த்தால் வரும் மறுமொழிகளிலொன்றிருணமாயிருக்கும்.

---

## The History of Christianity in Ceylon.

(Translated from the Friend.)

### இலங்கைத்தீபககிறிஸதுசமயோற்பவவிருத்தாந்தம்.

பிலிப்பு (Philip) என்னும் அப்போஸ்தலனால் ஞானஸ்நானம்பெற்ற ஓர் அண்ணகன் இலங்கைத்தீவுக்கு முதன்முதல் வந்து இரத்தச்சாட்சியாய் மரித்தானெனக் கேள்வியுண்டு. அதைநம்ப இடமில்லை. சம். தோமாஸ்(St. Thomas)என்பவர் இலங்கைத் தீவுக்குவந்து கிறிஸ்துவின் சுவிசேஷித்தைப் பிரசங்கித்து வந்தாரென இக்காலத்திற் பலர் பேசுவதுண்டு.இந்தத் தோமாசு கிறிஸ்துநாதர் பிறந்து (ருக) வருடத்திற்பின் இந்துதேசத்துக்குவந்து கிறிஸ்துச்சபையை ஸ்தாபித்தார். ஆனாலும் இந்துதேசத்திலே கிறிஸ்துச்சபையை நாட்டின தோமாசு என்பவர் அப்போஸ்தலனாகிய தோமாசு அல்லவென்று அநேக சரித்திரசாஸ்திரிகள் மறுக்கிறார்கள். ஒன்றையுந் நாங்கள் ரூபித்துண்மைப் படுத்திப் பேசுகிறதற்குச் சற்றெனுகிலுமிடமில்லை.

பிளினி (Pliny) என்னும் உரோமனுடைய எண்ணத்தின்படி முற்காலத்தில் இலங்கைத் தீவையும் உரோமர் அறிந்திருந்தார்களெனச் சில நியாயத்தினால் விளங்குகின்றது. தோல்மி (Ptolomy) என்பவன் இத்தீவுக்குத் தீவு இராவணம் (Taprobane) எனப் பெயரிட்டிருக்கிறான். இந்துதேசத்திலே கிறிஸ்துசபைவிருத்தியைப்பற்றிய சரித்திரத்தை எழுதினவரும், சென்னைநகரத்திற் போதகருமாயிருந்த கனம்பொருந்திய ஒவ்வென்னுந்துரை (Rev. J. Hough) உடைய எண்ணத்தின்படி ஆபிரிக்காக்கண்டத்தின் வடகரையிலிருக்கிற அலக்குசந்தரியாப்பட்டினத்தாரும், இந்தியரும் வெகுகாலத்துக்குமுன்னே வாணிககருமப்போக்குவரத்தாயிருந்தார்களென்றும் அந்த நகரியில் முதற் கோத்திரப்பிதாவாயிருந்த சம். மாற்கு என்பவர் (St. Mark) தானே இந்துதேசத்திற் கிறிஸ்துசபையை நாட்டினாரென்றும் விளங்குகின்றது

சிலகாலத்திற்பின் இந்தியர் அலக்குசந்தரியாநகரியிற் பிரதான கண்காணியாயிருந்த தெமித்திரியஸ் (Demetrius) என்பவரிடத்திற் சில ஆட்களை அனுப்பித் தாங்களினிமேற் கிறிஸ்துமார்க்கப்போதனைகளை அறிய விருப்புற்றவர்களாயிருப்பதினால், போதகர்களைத் தங்கள் சீமைக்கும் அனுப்பிவைக்கவேண்டுமென்று மன்றாடிக்கேட்டுக்கொண்டார்கள். அப்பொழுது அலக்குசந்தரியாப்பட்டினத்தில் ஸ்தாபித்திருந்த மிகவும் பெயர்போந்த சாத்திரப்பள்ளிக்கூடத்துக்குத் தலைவனாயிருந்த பாந்தினஸ்(Pantanus) என்பவர் குருவாக நியமிக்கப்பட்டவுடனே இந்துதேசத்துக்கனுப்பப்பட்டார், ஆனாலும் இவர் இலங்கைத்தீவுக்கும் வந்தாரோ அல்லவோ தெரியாது.

கிளேமென்ஸ் என்பவர் (Clemens Alexandrius) தம்முடையகாலத்தில் இந்துதேசத்தின் நடுப்பகுதிகளைக்குறித்து அலேக்குசந்தரியர் தெளிவாய் அறிந்திருந்தார்களென்றும், இன்னும் அத்திசைகளிலுள்ள பிராமணர் (Brahmins) முதலிய மதபோதிகள் ஒருவருக்கொருவர் தத்தமக்குரிய மதக்கோட்பாட்டில் வேறுபட்டார்களென்றுஞ் சொல்லியிருக்கிறார். கிளேமென்ஸ் என்பவர் மூன்றாஞ் சதாத்தத்திலேயிருந்தார். அக்காலத்திற் புத்தமதம் எங்கும் பரம்பிற்றென்றும், வெம்பாய் (Bombay) நகரிக்கருகாகவிருக்குங் காளிகோவில்களிற் புத்தன் முதலிய பற்பல விக்கிரகங்கள் நிலவறைகளிலே காணப்பட்டதென்று டாக்குத்தர் ஸ்டிபின்சன் என்பவர் (Dr. Stephenson) எழுதுகிறார். [இன்னும்வரும்.]

---

அறத்துப்பால்—இல்லறவியல்.

உ. அதிகாரம்.

வான்சிறப்பு.—*The excellence of Rain.*

ரு. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

பு. மழையில்லாமற் பொய்த்துப்போமானால் விரிந்த நீராற் சூழப்பட்ட விசாலமான உலகத்துள்ளே நிலைபெற்றுப் பசிப்பிணியானது உயிர்களை வருத்தப்படுத்தும்.

If the cloud-withholding rain deceive our hopes hunger will long give distress in the sea-surrounding spacious world. *Drew.*

When clouds, deceiving hope, withold their stores,
Around the sea-girt earth gaunt famine stalks. *Ellis.*

---

